முருகப்பெருமான் துணை

**மகான் வியாசமுனிவர் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**19.06.2022**, ஞாயிற்றுக்கிழமை

1. அருட்குருவே அரங்கா வாழ்க
அன்னதான வள்ளலே வாழ்க
பொருள்பட ஞானயுகம் படைக்க
புண்ணியபலமோடு ஞானமருளுகின்ற
2. அருளுகின்ற ஞானியே பெருமை கூறி
அகிலமதில் சுபகிருது மிதுனதிங்கள்
வரமென பஞ்ச திகதி கதிர் வாரம்
**(சுபகிருது வருடம் ஆனி மாதம் 05 நாள், 19.06.2022 ஞாயிற்றுக்கிழமை)**
வழங்குவேன் அருளாசி தன்னை
3. தன்னையே வியாசமுனிவர் யானும்
தரணியே வளம்பெற உரைப்பேன்
மன்னவனாக ஞானத்தலைவனாக
மாதவசி சன்மார்க்க விதையிட்டு வர
4. வருகவே ஞானவழிகள் தன்னை
வணங்கி மக்களெல்லாம் வர
தருமபலம் கொண்ட பூமியை
தவராஜன் தன் தவத்தால்
5. தவத்தால் மக்களை தருமவழி
தக்கபடி ஆட்படுத்தி இனிதே
அவதார நோக்கம் வடிவாக
அனைவரையும் தருமவான் ஆக்கி
6. ஆக்கியே மக்களிடை தானும்
ஆறுமுகனார் ஞானம் தனை
தேக்கமின்றி அரங்கன் படைத்து
தெரிவிப்பேன் ஞான உலகம் ஆக
7. ஆகவே மாற்றம் செய்துமே
அறிவிப்பேன் இந்த கலியிடரை
செகத்தை விட்டு அரங்கன் விரட்டி
செழுமை மிக்க ஞானபூமியாக
8. ஆகவே பாதுகாப்பு மிக்க
அறிவிப்பேன் சர்வபலம் கொண்ட
மகான்கள் வெளிப்படும் படி
மாதவசி சேவை பரவியே
9. பரவியே ஞான ஆட்சிகாலம்
பாடிடுவேன் உலகம் அடையும்
பரவிட எங்கும் பாதுகாப்பு
பண்பான மக்கள் சபையாகி

10. ஆகியே இயற்கையே வியக்க
அனைவரும் தயவு மிக்கவர்களாக
அகிலம் முழுக்க நிறைந்து
அறிவிப்பேன் ஞானிகள் ஆட்சி

11. ஆட்சியதும் ஆறுமுகன் தலைமை
அகிலம் முழுக்க கண்டடையும்
திட்டமுடன் அரங்கன் வழி
தனிவழியாக உலகையே மாற்றும்
அருளாசி முற்றே

–சுபம்–